முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் III பரீட்சை – 2022 யூலை

## (301) நிதி அறிக்கையிடல்
(Financial Reporting)

2022-08-20
காலை
[8.45 – 12.00]

பக்கங்கள் : 10
வினாக்கள் : 10

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்)**:**
  - (1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
    *விடையெழுத : 03 மணித்தியாலங்கள்*
  - (2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***
  - (3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*
  - (4) *சகல செய்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*
  - (5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்களின் பாவனை* ***மாத்திரம்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*
  - (6) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*
  - (1) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A
(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

(a) பொது நோக்க நிதிக் கூற்றுக்களின் பிரதான நோக்கங்களில் ஒன்று, பல்வேறு பொருளாதாரத் தீர்மானங்களையும் எடுப்பதற்கு பயனர்களுக்கு உதவுவதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

பொது நோக்க நிதிக் கூற்றுக்களைப் பயன்படுத்தி கம்பனியின் நாட்டதாரர்கள் (stakeholders) எடுக்கக்கூடிய இரண்டு (02) தீர்மானங்களைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(b) நிதிக் கூற்றுக்களிலுள்ள தகவல்கள் அது பிரதிநிதித்துவம் செய்வதாகக் கருதும் நிகழ்வுகளைப் பற்றிய நம்பத்தகுந்த பிரதிநிதித்துவத்தை அளிக்காத இடருக்கு உட்பட்டதாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

நிதித் தகவல்களின் பூரணத்தன்மை (completeness) மற்றும் ஒப்பீட்டுத்தன்மை (comparability) ஆகியவற்றுக்கிடையிலான வேறுபாட்டை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

**வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனி** அதன் செயற்பாடுகளை 2018 இல் ஆரம்பித்திருந்த அதே வேளை இக்கம்பனி சிறிய மற்றும் நடுத்தர அளவு நிறுவனமொன்றாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. கம்பனி கீழ்வரும் விடயங்கள் பற்றிய தெளிவினைப் பெறுவதற்காக நிதி ஆலோசகரான **பெரேராவை** அணுகியிருக்கிறது.

(a) கம்பனியானது 2021 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் அதன் தேய்மான (பெறுமானத் தேய்வு) முறையை குறைந்து செல்லும் மீதி முறையிலிருந்து நேர்கோட்டு முறைக்கு மாற்றியிருக்கிறது. இந்த மாற்றம், திரண்ட தேய்மானத்தில் ஏற்படுத்திய தாக்கமானது 1.2 மில்லியனாக இருந்தது.

(b) கம்பனி ரூபா 31 மில்லியன் செலவு செய்து ஒரு புதிய தொழிற்சாலைக் கட்டடத்தை நிருமாணித் துள்ளதுடன் அதற்கு காலக் கடன் ஒன்றினூடாக நிதியிடப்பட்டது. கட்டட நிருமாணத்தின் பூர்த்தி வரையிலான கடன் பெறுகைக் கிரயம் ரூபா 1.2 மில்லியனாக இருந்தது.

(c) கம்பனி, மூலப்பொருளின் பெறுமதியிடல் (Valuation) முறையை நிறையேற்றிய சராசரி முறையிலிருந்து (WAM) முதல் உள்ளே – முதல் வெளியே (FIFO) முறைக்கு மாற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

SME களுக்கான SLFRS இற்கிணங்க மேலுள்ள விடயங்கள் ஒவ்வொன்றும் **வரையறுக்கப்பட்ட ABC (தனியார்) கம்பனியின்** கணக்கேடுகளில் எவ்வாறு கவனத்திற் கொள்ளப்படலாம் என்பதை **விபரிக்குக.**

(05 புள்ளிகள்)

## வினா 03

ஒருங்கிணைந்த அறிக்கையிடல் (IR) ஆனது வணிகமொன்றிற்கான கூட்டாண்மை (நிறுவன) விழுமியங்களையும் நிலைபேற்றுத்தன்மையையும் உருவாக்குகின்ற ஒரு செயன்முறையாக பரந்தளவில் ஏற்பிசைவு செய்யப்பட்டுள்ளது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

(a) “ஒருங்கிணைந்த அறிக்கை” (Integrated Report) என்னும் பதத்தை **பொருள்வரையறை செய்க.**

(02 புள்ளிகள்)

(b) ஒருங்கிணைந்த அறிக்கையொன்றின் மூன்று (03) பிரதான உள்ளடக்கக் கூறுகளை (content elements) **இனங்காண்க.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க கணக்கீடு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டம் இயற்றப்பட்டதன் பின்னர், இலங்கை கணக்கீட்டு நியமங்களைக் கடைப்பிடிப்பது சட்டரீதியான தேவையாக மாறியிருப்பதுடன் அது குறிப்பிட்ட (Specific) வணிக நிறுவனங்களுக்கு பொருத்தப்பாடுடையதாக இருக்கிறது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) குறிப்பிட்ட வணிக நிறுவனங்களின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மூன்று (03) உரிமங்களைக் (Entities) **குறிப்பிடுக.**

(03 புள்ளிகள்)

(b) இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் கண்காணிப்புச் சபையின் இரண்டு (02) அதிகாரங்களை (powers) **குறிப்பிடுக.**

(02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 05

2022 மார்ச் 31 மற்றும் 2021 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான **வரையறுக்கப்பட்ட மானெல் (தனியார்) கம்பனியின்** நிதி நிலைக் கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட மானெல் (தனியார்) கம்பனி**

**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| **மார்ச் 31 இல்** | **2022** | **2021** |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் | 7,200 | 6,000 |
| திரண்ட தேய்மானம் | (4,100) | (3,500) |
| **முன்கொணரற் பெறுமதி** | **3,100** | **2,500** |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 3,120 | 4,360 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | 1,980 | 2,930 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,400 | 860 |
| | **7,500** | **8,150** |
| **மொத்தச் சொத்துக்கள்** | **10,600** | **10,650** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | |
| **உரிமையாண்மை:** | | |
| குறிப்பிடு மூலதனம் | 2,000 | 2,000 |
| கைக்கொள் இலாபம் | 2,690 | 2,790 |
| | **4,690** | **4,790** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| நீண்ட காலக் கடன்கள் | 2,200 | 2,050 |
| ஊழியர் நன்மைகள் (பணிக்கொடை ஏற்பாடு) | 1,750 | 1,250 |
| | **3,950** | **3,300** |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| குறுங்காலக் கடன்கள் | 210 | 150 |
| வியாபார சென்மதிகள் | 1,390 | 2,140 |
| செலுத்த வேண்டிய வட்டி | 150 | 120 |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 210 | 150 |
| | **1,960** | **2,560** |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **10,600** | **10,650** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான வரிச் செலவினம் ரூபா 145,000/-.

(2) ரூபா 1.1 மில்லியனுக்குக் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரம் 2021 ஏப்ரல் 01 இல் ரூபா 1.5 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது. 2021 ஏப்ரல் 01 இல் இந்த இயந்திரத்தின் திரண்ட தேய்மானம் ரூபா 500,000/- ஆகும். இந்த இயந்திரத்திற்கு மாற்றீடாக ஒரு புதிய இயந்திரம் 2022 மார்ச் 31 இல் கொள்வனவு செய்யப்பட்டது.

(3) ஆண்டிற்கான வட்டிச் செலவினம் ரூபா 350,000/- ஆக இருப்பதுடன் ஒரு புதிய கடன் ரூபா 900,000/- ஆண்டின்போது பெற்றுக்கொள்ளப்பட்டது.

(4) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பணிக்கொடை ஏற்பாடு ரூபா 600,000/- ஆகும்.

(5) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் சாதாரண பங்குதாரர்களுக்கு எவ்வித பங்கிலாபங்களும் செலுத்தப்படவில்லை.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட மானெல் (தனியார்) கம்பனியின்** காசுப் பாய்வுக் கூற்றினை <u>நேரில் முறையைப் பயன்படுத்தித்</u> **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 06

(A) உலகளாவிய நிதிச் சந்தையில் அண்மைய அபிவிருத்திகளுடன் நிதிக் கருவிகள் (Financial instruments) சிக்கலானதாக மாறிவருகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) "நிதிக் கருவி" என்னும் பதத்தினை **பொருள்வரையறை செய்க**. (02 புள்ளிகள்)

(b) நிதிப் பொறுப்புகளின் (பரிப்புக்களின்) கீழ் வகைப்படுத்தப்பட்ட மூன்று (03) உருப்படிகளை (items) **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட சக்விதி (தனியார்) கம்பனி** 2021 ஏப்ரல் 01 இல் புதிய தொழிற்சாலைக் கட்டடத்தின் நிருமாணப் பணிகளை ஆரம்பித்து, அதனை 2021 டிசெம்பர் 31 இல் நிறைவு செய்திருந்தது. இந்தக் கட்டடத்திற்காகச் செலவிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 50 மில்லியன் ஆகும். இந்த நிருமாணச் செயற்றிட்டத்திற்கு செயற்றிட்டக் கடனாகப் பெறப்பட்ட ரூபா 40 மில்லியனும் காலக் கடனாகப் பெறப்பட்ட ரூபா 10 மில்லியனும் முழுவதுமாக இடப்பட்டன. இந்த கடன் வசதிகள் 2021 ஏப்ரல் 01 இல் பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் அவை ஆண்டின் காலப்பகுதியில் இந்த நிருமாணத்திற்காக முழுமையாகப் பயன்படுத்தப்பட்டன. செயற்றிட்டக் கடன் மற்றும் காலக் கடனுக்கான வருடாந்த வட்டி வீதங்கள் முறையே 10% உம் 9% உம் ஆகும். இதற்கு மேலதிகமாக, செயற்றிட்டக் கடன் பயன்படுத்தப்படும் வரை அக்கடன் தொகை பணச் சந்தைக் கருவிகளில் முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து இந்த நிதியாண்டில் 0.5 மில்லியன் வட்டி வருமானமொன்றை கம்பனி ஈட்டியுள்ளது. கடன்களுக்கான வட்டி 2021/22 ஆண்டின் காலப்பகுதியில் கம்பனியால் செலுத்தப்பட்டதுடன் கடன்களின் மூலதன மீள்-கொடுப்பனவுகள் 2022/23 ஆம் ஆண்டிலிருந்து செலுத்தப்படுகின்றன.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 23 – கடன்பெறுகைக் கிரயம் என்ற நியமத்தின்படி, 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக மூலதனமாக்கப்பட வேண்டிய கடன்பெறுகைக் கிரயத்தைக் **கணிக்குக.** (05 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(a) **வரையறுக்கப்பட்ட டிஜிசெல் கம்பனி** ஆனது புத்தம் புதிய மடிக் கணினிகளை விற்பனை செய்வதிலும் இணைய வசதிகளை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ள ஒரு தொலைத்தொடர்புக் கம்பனியாகும். 2021 ஏப்ரல் 01 இல், இக்கம்பனியானது ரூபா 10,000/- மாதாந்த வாடகைக்கு மடிக்கணினி ஒன்றையும் இணைய வசதியையும் வழங்குவதற்காக வாடிக்கையாளர் ஒருவருடன் இரண்டு வருட ஒப்பந்தமொன்றைச் செய்து கொண்டது.

இவற்றைத் தனித்தனியாக விற்பனை செய்யின், மடிக்கணினி ஒன்றின் சந்தை விலை ரூபா 100,000/- ஆகவும் மாதமொன்றுக்கான இணைய வசதிக்கான கட்டணம் ரூபா 7,000/- ஆகவும் இருக்கும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**
SLFRS 15 – வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்கள் மூலமான வருமானம் என்ற நியமத்தின்படி, வருமான ஏற்பிசைவுக்காக **வரையறுக்கப்பட்ட டிஜிசெல் கம்பனியின்** 2022 மார்ச் 31 மற்றும் 2023 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுடன் தொடர்புடைய கணக்கீட்டுப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட ருசிறு கம்பனியின்** கணக்காளர் 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டின் காலப்பகுதியில் இடம்பெற்ற கீழ்வரும் நிகழ்வுகளைக் கண்டறிந்துள்ளது :

(1) மேம்பட்ட தொழில்நுட்பம் மற்றும் உற்பத்திக் கொள்ளளவைக் கொண்ட புதிய இயந்திரம் நிறுவப்பட்டதால், உற்பத்திப் பிரிவில் பயன்படுத்தப்பட்ட இயந்திரங்களில் ஒன்று உற்பத்திக்கு தொடர்ச்சியாகப் பயன்படுத்தப்படவில்லை. இந்த இயந்திரம் 2022 மார்ச் 31 இல் 7.5 மில்லியனால் வலுவிழந்திருந்தது. இந்த வலுவிழப்பு நட்டமானது **வரையறுக்கப்பட்ட ருசிறு கம்பனியின்** 2021/22 ஆம் நிதியாண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்யப்பட்டிருக்க வில்லை.

(2) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டின் காலப்பகுதியில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் மீதான தேய்மானம் கணக்கிடப்படவில்லை என்பதையும் ஆண்டிற்கான தேய்மானத் தொகை ரூபா 750,000/- என்பதையும் கணக்காளர் மேலும் கண்டறிந்திருந்தார்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

LKAS 8 – கணக்கீட்டுக் கொள்கைகள், கணக்கீட்டு மதிப்பீடுகளில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் வழுக்கள் என்ற நியமத்தின்படி, **வரையறுக்கப்பட்ட ருசிறு கம்பனியின்** 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான மேற்படி விவரணங்களின் தாக்கத்தை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

கீழ்வரும் பரீட்சை மீதி 2022 மார்ச் 31 இலான **ஜக்சன் PLC** இன் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

**ஜக்சன் PLC**

**2022 மார்ச் 31 இலான பரீட்சை மீதி** *(ரூபா '000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| குறிப்பிடு மூலதனம் (10,000,000 சாதாரண பங்குகள்) | | 100,000 |
| 2021 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 14,500 |
| **ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :** | | |
| காணியும் கட்டடமும் (காணியின் பெறுமதி - ரூபா 20 மில்லியன்) | 38,000 | |
| இயந்திரம் | 14,000 | |
| **2021 ஏப்ரல் 01 இல் திரண்ட தேய்மானம்:** | | |
| கட்டடம் | | 9,000 |
| இயந்திரம் | | 8,000 |
| 2022 மார்ச் 31 இல் தொக்கு – கிரயத்தில் | 41,000 | |
| வியாபார வருமதிகள் / வியாபார சென்மதிகள் | 37,000 | 17,900 |
| காசுக் கையிருப்பும் வங்கி மீதியும் | 7,200 | |
| நிலையான வைப்புகள் - 6 மாதங்களில் முதிர்ச்சியடைந்தது | 20,000 | |
| 2022 மார்ச் 31 இல் ஐயுறவுக் கடன் ஏற்பாடு | | 6,200 |
| முற்கொடுப்பனவுகள் | 12,000 | |
| செலுத்திய வருமான வரி | 6,100 | |
| விற்பனைக் கிரயம் / விற்பனை | 102,800 | 168,000 |
| கிடைக்கபெற்ற வட்டி வருமானம் | | 2,800 |
| முற்பண குத்தகைக் கொடுப்பனவு | 1,988 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி – 2021 ஏப்ரல் 01 இல் | | 4,300 |
| நிருவாகச் செலவினங்கள் | 17,700 | |
| விநியோகச் செலவினங்கள் | 29,912 | |
| நிதிச் செலவினங்கள் | 3,000 | |
| | **330,700** | **330,700** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) 2022 மார்ச் 31 இல் தொக்குகளின் நிகர தேறத்தக்க பெறுமதி (NRV) ரூபா 39,400,000/- ஆகும்.

(2) 2022 மார்ச் 31 இல் கம்பனி அதன் காணியை ரூபா 25,000,000/- ஆக மீள்மதிப்பீடு செய்திருந்ததுடன் இது தொடர்பில் கணக்கேடுகளில் பதிவு செய்யப்படவில்லை.

(3) 2021 ஏப்ரல் 01 இல் நிதிக் குத்தகையொன்றின் கீழ் ஒரு புதிய மோட்டார் வாகனம் கொள்வனவு செய்யப்பட்டது. குத்தகைக்குப் பெறப்பட்ட மோட்டார் வாகனத்தின் சீர் மதிப்பு ரூபா 4 மில்லியனாக இருந்ததுடன் குத்தகைக் காலம் 4 ஆண்டுகளாகக் காணப்பட்டது. வருடாந்த குத்தகைத் தவணைக் கட்டணம் ரூபா 988,000/- ஆனது ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 31 ஆந் திகதி செலுத்தப்பட வேண்டும். உள்ளார்ந்த வட்டி வீதம் ஆண்டிற்கு 12% ஆகும். மோட்டார் வாகனத்தின் உரிமையானது குத்தகைக் கால முடிவில் **ஜக்சன் PLC** இற்கு மாற்றப்படுகிறது. மோட்டார் வாகனத்திற்காகச் செலுத்தப்பட்ட உடனடிக் கொடுப்பனவு (down payment) ரூபா 1 மில்லியனாக இருப்பதுடன் 01 ஆவது தவணைக் கொடுப்பனவு ரூபா 988,000/- ஆனது முற்பண குத்தகைக் கொடுப்பனவுக் கணக்கின் கீழ் பதிவு செய்யப்பட்டிருந்தது. இதனைத் தவிர, இந்த விடயம் தொடர்பில் வேறு எந்தப் பதிவுகளும் கணக்கேடுகளில் செய்யப்படவில்லை.

(4) ஆதனம், பொறி மற்றும் உபகரணமானது கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்பட வேண்டும். சொத்துக்களின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடம் | : | 50 ஆண்டுகள் |
| இயந்திரம் | : | 05 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனம் | : | 04 ஆண்டுகள் |

(5) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த நிதியாண்டு தொடர்பான கணக்காய்வுக் கட்டணம் ரூபா 400,000/- கணக்கிற் கொள்ளப்படவில்லை என்பதுடன் முற்கொடுப்பனவுகள் கணக்கானது 2022 இன் முழுமையான நாட்காட்டி ஆண்டிற்குமாகச் செய்யப்பட்ட காப்புறுதிக் கொடுப்பனவைப் பிரதிநிதித்துவம் செய்கிறது.

(6) 2020/21 வரிமதிப்பாண்டிற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு (பொறுப்பு) ரூபா 4,300,000/- ஆகும். இது வரிமதிப்பாண்டு 2021/22 காலப்பகுதியில் செலுத்தப்பட்டதுடன், செலுத்தப்பட்ட தொகையானது செலுத்தப்பட்ட வருமான வரிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. வரிமதிப்பாண்டு 2021/22 இற்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூபா 7,300,000/- என மதிப்பிடப்பட்டுள்ளது.

(7) 2021/22 ஆண்டின் காலப்பகுதியில் கம்பனிக்கு எதிராக கம்பனியின் வாடிக்கையாளர் ஒருவர் வழக்கொன்றைத் தாக்கல் செய்துள்ளார். இது தொடர்பில் 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வழங்கப்பட்ட தீர்ப்பின்படி, கம்பனியானது நட்டஈடாக ரூபா 375,000/- இனைச் செலுத்த வேண்டியுள்ளது.

(8) நிலையான வைப்புகள் மீது 2022 மார்ச் மாதத்திற்கான வட்டி வருமானம் ரூபா 250,000/- ஆனது 2022 ஏப்ரல் 02 இல் பெறப்பட்டது.

(9) நிதிக் கூற்றுக்கள் வழங்கப்படுவதற்காக 2022 மே 31 இல் கம்பனியின் பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

பிரசுரிப்புக்குப் பொருத்தமான வடிவத்தில் **ஜக்சன் PLC** இற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான இலாப அல்லது நட்ட மற்றும் ஏனைய முற்றடக்க வருமானக் கூற்று (முற்றடக்க வருமானக் கூற்று). (09 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான நிதி நிலைக் கூற்று. (09 புள்ளிகள்)

(c) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று. (02 புள்ளிகள்)

(d) 2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆதனம், பொறி மற்றும் உபகரண மாற்றங்களைக் காட்டும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள். (05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

கீழ்வரும் நிதிக் கூற்றுக்கள் 2022 மார்ச் 31 மற்றும் 2021 மார்ச் 31 ஆகிய திகதிகளிலான / ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட கயிசோன் கம்பனியின்** ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டுள்ளன :

**வரையறுக்கப்பட்ட கயிசோன் கம்பனி**
**2022 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான**
**வருமானக் கூற்றிலிருந்தான பிரித்தெடுப்பு**

| | **ரூபா '000** |
|---|---:|
| விற்பனைகள் | 76,000 |
| விற்பனைக் கிரயம் | (49,400) |
| மொத்த இலாபம் | 26,600 |
| வட்டி மற்றும் வரிக்கு முன்னரான இலாபம் | 11,000 |
| வட்டிச் செலவினங்கள் | (2,600) |
| வரிக்கு முன்னரான இலாபம் | 8,400 |
| வரிக்குப் பின்னரான இலாபம் | 7,140 |

**வரையறுக்கப்பட்ட கயிசோன் கம்பனி**
**நிதி நிலைக் கூற்றுக்கள்** *(ரூபா '000)*

| | **2022 மார்ச் 31 இல்** | | **2021 மார்ச் 31 இல்** | |
|---|---:|---:|---:|---:|
| **சொத்துக்கள் :** | | | | |
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - முன்கொணரற் பெறுமதியில் | | 140,000 | | 132,000 |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | | | |
| தொக்குகள் | 41,000 | | 40,000 | |
| வியாபார வருமதிகள் | 27,000 | | 22,000 | |
| காசும் காசுச் சமானங்களும் | 7,200 | 75,200 | 6,400 | 68,400 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | **215,200** | | **200,400** |
| **உரிமையாண்மையும் பரிப்புக்களும் :** | | | | |
| **உரிமையாண்மை :** | | | | |
| குறிப்பிடு மூலதனம் | | 100,000 | | 100,000 |
| கைக்கொள் இலாபம் | | 45,000 | | 37,860 |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | | | |
| நீண்ட காலக் கடன் | | 18,000 | | 24,000 |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | | | |
| வியாபார சென்மதிகள் | 35,700 | | 27,000 | |
| செலுத்த வேண்டிய வருமான வரி | 4,500 | | 5,500 | |
| அட்டுறு செலவினங்கள் | 12,000 | 52,200 | 6,040 | 38,540 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | | **215,200** | | **200,400** |

அனைத்து விற்பனைகளும் கொள்வனவுகளும் கடனடிப்படையில் மேற்கொள்ளப்பட்டன எனக் கருதுக.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) 2022 மார்ச் 31 இலான / முடிவடைந்த நிதியாண்டிற்கான மேற்படி தகவல்களின் அடிப்படையில் **வரையறுக்கப்பட்ட கயிசோன் கம்பனியின்** கீழ்வரும் விகிதங்களைக் **கணிக்குக** :

(i) மொத்த இலாப விகிதம்
(ii) நடப்பு விகிதம்
(iii) கடன்பட்டோர் சேகரிப்புக் காலம்
(iv) தொக்கு இருப்புக் காலம்
(v) கடன்கொடுத்தோர் தீர்ப்பனவுக் காலம்
(vi) நெம்பு விகிதம்
(vii) வட்டிக் காப்பு (Interest Cover)
(viii) சொத்துப் புரள்வு விகிதம். (08 புள்ளிகள்)

(b) **வரையறுக்கப்பட்ட கயிசோன் கம்பனியின்** கீழ்வரும் விகிதங்களை மேம்படுத்துவதற்குச் சாத்தியமான இரண்டு (02) வழிகளைக் **குறிப்பிடுக.**

(i) மொத்த இலாப விகிதம்
(ii) தொக்கு இருப்புக் காலம்

(04 புள்ளிகள்)

(மொத்தம் 12 புள்ளிகள்)

## வினா 10

கீழ்வரும் நிதி நிலைக் கூற்றுக்கள் 2022 மார்ச் 31 இலான **வரையறுக்கப்பட்ட அஸ்ரோ கம்பனி (AL)** மற்றும் **வரையறுக்கப்பட்ட பெஸ்ரோ கம்பனி (BL)** ஆகியவற்றின் ஏடுகளிலிருந்து பிரித்தெடுக்கப் பட்டுள்ளன :

**2022 மார்ச் 31 இலான**

**நிதி நிலைக் கூற்றுகள்** *(ரூபா '000)*

| | **AL** | **BL** |
|---|---|---|
| **நடைமுறையல்லாச் சொத்துக்கள் :** | | |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 50,000 | 15,000 |
| திரண்ட தேய்மானம் | (15,400) | (3,750) |
| முன்கொணரற் பெறுமதி | 34,600 | 11,250 |
| **BL இல் முதலீடு** | 50,000 | - |
| **நடைமுறைச் சொத்துக்கள் :** | | |
| தொக்குகள் | 12,300 | 15,000 |
| வியாபார வருமதிகள் | 30,200 | 10,900 |
| **AL** இடமிருந்தான மீதி நிலுவை | - | 2,000 |
| காசும் காசுச் சமானங்களும் | 2,750 | 1,550 |
| **மொத்தச் சொத்துக்கள்** | **129,850** | **40,700** |
| **உரிமையாண்மை :** | | |
| குறிப்பிடு மூலதனம் | 60,000 | 25,000 |
| கைக்கொள் இலாபம் | 27,800 | 9,900 |
| | **87,800** | **34,900** |
| **நடைமுறையல்லாப் பரிப்புக்கள் :** | | |
| வங்கிக் கடன் | 16,000 | - |
| **நடைமுறைப் பரிப்புக்கள் :** | | |
| வியாபார சென்மதிகள் | 20,350 | 5,140 |
| **BL** இற்கான மீதி நிலுவை | 2,000 | - |
| வங்கி மேலதிகப்பற்று | 3,700 | 660 |
| **மொத்த உரிமையாண்மையும் பரிப்புக்களும்** | **129,850** | **40,700** |

கீழ்வரும் மேலதிக தகவல்களும் தரப்பட்டுள்ளன :

(1) **AL** ஆனது 2021 ஏப்ரல் 01 இல் **BL** இன் சாதாரண பங்கு மூலதனத்தின் 80% இனைக் கையகப்படுத்தியுள்ளது. கையகப்படுத்திய திகதியில் கட்டுப்பாடற்றோர் நாட்டத்தின் சீர் மதிப்பு ரூபா 6,000,000/- ஆக இருந்ததுடன் **BL** இன் இனங்காணத்தக்க நிகரச் சொத்துக்களின் சீர் மதிப்பு அதன் புத்தகப் பெறுமதிக்குச் சமனாக இருந்தது. கையகப்படுத்தல் திகதியில் **BL** இன் கைக்கொள் இலாபம் ரூபா 7,000,000/- ஆக இருந்தது.

(2) ஆண்டின் காலப்பகுதியில், **BL** ஆனது 25% இலாப எல்லை வைத்து **AL** இற்கு பொருள்களை விற்பனை செய்திருந்தது. 2022 மார்ச் 31 இல், **BL** இடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 3.5 மில்லியன் பெறுமதியுடைய விற்பனை செய்யப்படாத தொக்குகள் **AL** இன் தொக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தன. மேலும், இந்தக் கொடுக்கல் வாங்கல் மீது செலுத்த வேண்டிய ரூபா 2 மில்லியன் ஆனது 2022 மார்ச் 31 இலான **BL** இன் வருமதிகளிலும் **AL** இன் சென்மதிகளிலும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(3) ஆண்டின் காலப்பகுதியில், **BL** இனால் ரூபா 5 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்ட ஒரு காணி **AL** இற்கு ரூபா 10 மில்லியனுக்கு விற்பனை செய்யப்பட்டது.

(4) நன்மதிப்பு மீதான வலுவிழப்பு மீளாய்வு (impairment review) 2022 மார்ச் 31 இல் முன்னெடுக்கப்பட்டதுடன் அதில் நன்மதிப்பு ரூபா 300,000/- இனால் வலுவிழந்திருந்தமை வெளிப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) ஒன்றித்தலிலிருந்து எழுகின்ற நன்மதிப்பைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2022 மார்ச் 31 இலான ஒன்றித்த நிதி நிலைக் கூற்றைத் **தயாரிக்குக.**
(10 புள்ளிகள்)
(மொத்தம் 13 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக் குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |